**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No.390/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 6 |
| Name | : | கருப்பசாமி, வயது 50 |
| Father Name/Husband Name | : | மாடசாமி |
| Village | : | பூர்ணிம்மாள் காலனி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | ரியல் எஸ்டேட் தொழில் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of July 2026.

**(Accused present).**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். தேதி, மாதம் ஞாபகம் இல்லை, ஒரு நாள் நானும், மற்றொரு நபரும் சாத்தூர் ரோடு மேம்பாலத்திலிருந்து வந்து கொண்டிருந்தபோது தோட்டிலோவன்பட்டி விலக்கில் வைத்து போலீசார் என்னிடம் கையொப்பம் கேட்டதன்பேரில் நானும், மற்றொரு நபரும் மகஜரில் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. (**அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு வழங்கப்பட்டு பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டது)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. கடந்த 08.11.2024 ஆம் தேதி காலை 08.00 மணியளவில் நானும், வெற்றி சிகாமணி என்பவரும் தோட்டிலோவன்பட்டி மேம்பாலத்திலிருந்து வந்து கொண்டிருந்தபோது கோவில்பட்டி கிழக்கு காவல் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், பார்வை மகஜரில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.